**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 28/2022**

**Date** : 02.02.2026

**பி. வா.சா. 1 - மகேஷ்.**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் தற்போது வங்குவசித்து வருகிறேன் என்றால் வழுக்கம்பாறை மணவிளையில் வசித்து வருகிறேன். நான் மணவிளை சி.எஸ்.ஐ சர்ச்சில் உறுப்பினராக உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சர்ச்சில நான் பல்வேறு பொறுப்புகளில் இருந்துள்ளேன் தற்போதும் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். என்னென்ன பொறுப்புகளில் இருந்துள்ளேன் என்றால் தற்போது செயலாளராக இருந்தேன் இதற்கு முன் கணக்காளராக இருந்தேன். சர்ச்சின் நடவடிக்கை அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் செயலாளராக இருந்த சமயத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் தெரியும். நான் கணக்காளராக இருந்த போது உள்ள நடவடிக்கை எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த தேதியில் இருந்து சர்ச் விபரங்கள் தெரியவந்தது என்றால் சாட்சி கையில் தேதி எழுதி வைத்து அதைபார்த்து கூறுகிறார்.

நான் கணக்காளராக இருந்த போது எங்களது சபையில் YMM மிஷனரியை தாங்குவதற்கு எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதி YMM மிஷனரியை தாங்குவதற்கு கொடுத்த அறிவிப்பு குறித்து தெரியுமா என்றால் அறிவிப்பு கொடுக்கவில்லை. YMM மிஷனரியை தாங்குவதற்கு வாதி சபைக்கு பணம் கொடுத்து அது மிஷனரிக்கு அனுப்பப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. YMM மிஷனரியை

தாங்குவதற்கு வாதி சபைக்கு பணம் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் தெரியும் அதுவரை தெரியாது. வாதி YMM மிஷனரியை தாங்குவதற்கு வாதி சபைக்கு பணம் கொடுத்து அதை சபை பெற்றுக் கொண்டு அதற்கான அறிவிப்பை சர்ச்சில் தெரிவித்த விபரம் எனக்கு தெரிந்தும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

YMM மிஷனரியை தாங்குவதற்கு வாதி சபைக்கு பணம் கொடுத்த விபரம் குறித்து கணக்கு விபரங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை தெரியவரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது சிறிய சர்ச் என்பதால் செயலாளர் தான் அனைத்திற்கும் பொறுப்பு. கணக்கு புத்தகத்தில் கணக்கு எழுதியவர் யார் என்றால் நான் தான். மேற்படி கணக்கு புத்தகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை விபரம் தெரியவரும் என்றால் சரிதான் கணக்கு புத்தகம் தற்சமயம் எங்களிடம் இல்லை. YMM மிஷனரியை தாங்குவதற்கு வாதி சபைக்கு பணம் கொடுத்த சமயம் அதனை எதிர்த்து நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எங்களது சபை அங்கத்தினர்களும் மேற்படி பணம் வாங்கி அனுப்புவதற்கு எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை நடவடிக்கையும் எனக்க வில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது YMM மிஷனரியை தாங்குவதற்கு வாதி சபைக்கு பணம் கொடுத்ததாக எங்களுக்கும் தெரியாது உறுப்பினர்களுக்கும் தெரியாது.

எங்களது சபையில் YMM மிஷனரிக்கு காணிக்கை வாங்குவதற்கு ரசீது கொடுக்கப்படுமா என்றால் காணிக்கை வாங்குவதில்லை. என்னென்ன காணிக்கை வாங்குவோம் என்றால் மாதாந்திர காணிக்கை, ஸ்தேத்திர காணிக்கை, பைகாணிக்கை.

மாதாந்திர காணிக்கை, ஸ்தேத்திர காணிக்கை, பைகாணிக்கைகள் வாங்குவதற்கான ரசீது கொடுப்போமா என்றால் கொடுப்போம். மேற்படி காணிக்கைகள் எவையெல்லாம் கட்டாயம் என்றால் எதுவுமே கட்டாய காணிக்கை கிடையாது சங்க காணிக்கை மட்டும் கட்டாயமானது. காணிக்கை கவர்களை திருப்பி கொடுப்போமா என்றால் நாங்கள் சார்ச்சின் முன்பகுதியில் வைத்து விடுவோம் அவர்கள் எடுத்துக்கொள்வார்கள். என்னிடம் காட்டப்படும் சங்க காணிக்கை கவர் எங்களது சர்ச்சில் கொடுக்கப்பட்டது என்றால் கவர் எங்கள் சர்ச் கவர்தான் ஆனால் குறிப்பிட்ட பெயருக்கு கொடுக்கப்பட்டது குறித்து தெரியாது. **மேற்படி சங்க காணிக்கை கவர் அசல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் நற்செய்தி பணி காணிக்கை கவர் எங்களது சர்ச்சில் கொடுக்கப்பட்டது என்றால் கவர் எங்கள் சர்ச் கவர்தான் ஆனால் குறிப்பிட்ட பெயருக்கு கொடுக்கப்பட்டது குறித்து தெரியாது. **மேற்படி நற்செய்தி பணி காணிக்கை கவர் அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வாதி எங்களது floating member என்பதால் மேற்படி கவர்கள் அவரின் பெயரில் சர்ச்சில் இருந்து கவர் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல மேற்படி floating member என்ற அமைப்பே கிடையாது. வாதி கொடுக்கும் காணிக்கையை வாங்க மறுத்ததால் அவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான் காணிக்கை வைக்காமலேயே புகார் கொடுத்தார். மேற்படி புகாரின் விசாரணையில் நான் ஆஜரானது இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பாக என்றால் சரிதான். நான் 13.02.2021 அன்று மேற்படி மனு குறித்து காவல்நிலையத்தில் ஆஜரானேன் என்றால் சரிதான். என்னிடம்

காட்டப்படும் ஆவணம் நான் காவல்நிலையத்தில் பதிலாக எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். மேற்படி பதில் கடிதம் உண்மை நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வா.சா.ஆ.8 ல் வாதி YMM மிஷினரிக்கு பணம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது ஆகையால் 13.02.2021 அன்று எனக்கு மேற்படி விபரம் தெரிய வந்தது என்றால் சரிதான். மேற்படி விபரம் வழக்கு தாக்கல் செய்தபின் தான் தெரியவந்தது என்று கூறியுள்ளேன் அது பொய் என்றால் சரியல்ல.

**வழக்கு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**